Judicial Form No.53
( See Rule 42 )
DEPOSITION OF WITNESSES
(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.III TIRUPATTUR**

Case No. **CC.NO.240/2022**

DEPOSITION OF PROSECUTION SIDE EVIDENCE No. 2 Page.No.

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | திரு. அன்பழகன் | **தொழில்** | பேக்கரி வேலை |
| **தந்தை/கணவர் பெயர்** | திரு.சாம்ராஜ் | **கிராமம்/ஊர்** | சென்னை |
| **வயது** | 47 | **மாவட்டம்** | சென்னை |

| | |
|---|---|
| எதிரிகள் ஆஜர் | 1 to 3 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969 )on the 29 day of July 2026

சாட்சி ஆஜர் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

**<u>முதல் விசாரணை</u>.-**

நான் மேற்கண்ட விலாசத்தில் வசித்து வருகிறேன். இவ்வழக்கின் புகார்தாரர் எனது அக்கா ஆவார். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியாது. சம்பவத்தின் போது நான் அங்கு இல்லை. போலீசார், சம்பவயிடத்திற்கு வந்து வரைபடம் வரைந்தது சம்மந்தமாக என்னிடம் கையொப்பம் வாங்கினார்கள். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசர், 1ம் எதிரி அளித்த ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகரில் உள்ள 1 வது சாட்சி கையொப்பங்கள் என்னுடையது தான். **( அந்த பார்வை மகசர் அ.சா.ஆ. 1 ஆகவும், 1ம் எதிரி அளித்த ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள 1வது சாட்சி கையொப்பங்கள் மட்டும் அ.சா.ஆ 2,3 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

(அரசு தரப்பில் சாட்சியை பகுதி பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டது. அனுமதி வழங்கப்பட்டது. )

**<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

இந்த வழக்கு சம்மந்தமாக 02.08.2020 அன்று காலை 11.00 மணியளவில் பச்சூர் டோல்கேட்டிடம் 1ம் எதிரியை போலீசார் விசாரித்தபோது அவர் அளித்த ஒப்புதல்

வாக்குமூலத்திலும், அதன் அடிப்படையில் கைப்பற்றுதல் மகசரில் 12.15 மணியளவில் வழக்கு சொத்தினை கைப்பற்றியபோதும் அதற்கு சாட்சியாக இருந்து கையொப்பம் செய்து விட்டு, தற்போது எனக்கே தெரிந்த காரணத்திற்காகவும், எதிரிகள் எனக்கு வேண்டியவர்/வேண்டியவர்கள் என்பதாலும் எதிரிகளுக்கு ஆதரவாகவும், அரசு தரப்பிற்கு எதிராகவும் இந்நீதிமன்றத்தில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>** - இல்லை

**<u>மறுவிசாரணை –</u>** இல்லை

Taken down by me/before me in open Court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

***Sd/- S.Kovendhan,***

Signature of Witness

Judicial Magistrate No. III (FAC),
Tirupathur.

***// True Copy//***

Judicial Form No.53
( See Rule 42 )
DEPOSITION OF WITNESSES
(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.III TIRUPATTUR**

Case No. **CC.NO.240/2022**

DEPOSITION OF PROSECUTION SIDE EVIDENCE No. 1 Page.No.

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | திரு. சத்தியமூர்த்தி | **தொழில்** | தனியார் வேலை |
| **தந்தை/கணவர் பெயர்** | திரு.சம்பத் | **கிராமம்/ஊர்** | கே. பந்தாரபள்ளி |
| **வயது** | 37 | **மாவட்டம்** | திருப்பத்தூர் |

| | |
|---|---|
| எதிரிகள் ஆஜர் | 1 to 3 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969 )on the 29 day of July 2026

சாட்சி ஆஜர் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

**முதல் விசாரணை**.-

நான் மேற்கண்ட விலாசத்தில் வசித்து வருகிறேன். வழக்கின் புகார்தாரரான வனிதா எனது அம்மா. 2024 ம் வருடம் எனது அம்மா இறந்து விட்டார். கடந்த 5 வருடங்களுக்கு முன்பு, மாலை 06.00 மணியளவில் எனது அம்மா தன்னிடம் 3 நபர்கள் வந்து தன்னை கத்தியை வைத்து மிரட்டியதாக கூறினார். பின்னர், நானும் எனது அம்மாவும் காவல் நிலையம் சென்றோம். எனது அம்மா காவல் நிலையத்தில் புகார் அளித்தார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை -** இல்லை

**மறுவிசாரணை –** இல்லை

Taken down by me/before me in open Court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

***Sd/- S.Kovendhan,***

Signature of Witness

Judicial Magistrate No. III (FAC),
Tirupathur.

// **True Copy**//